**Starting time 12.10 P.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 165/2008**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Thiru. M. Sundararajan, Head Clerk of this court, on 13.08.2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகவேல் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : நான் வாதியின் உறவினரா என்றால், இல்லை. நான் வேறு ஊரில் குடியிருக்கிறேன், வாதி வேறு ஊரில் குடியிருக்கிறார் என்றால், சரிதான். இன்று வாதி நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால், இல்லை. வாதி இவ்வழக்கை எத்தனை பேர் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால், 7 பேர் மீது தாக்கல் செய்துள்ளார். முனியப்பன், அன்னகிளி, பச்சமுத்து, ஆட்டுக்கார கண்ணன், சின்னசாமி, ராமசாமி ஆகியோர் எங்கு வசிக்கிறார்கள் என்று தெரியுமா என்றால், தெரியாது. இவ்வழக்கின் வாதி தாவா சொத்தை யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்று தெரியுமா என்றால், தெரியும். நான் அந்த கிரயப்பத்திரத்தில் சாட்சி கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்தின் நீள, அகலம் தெரியுமா என்றால், தெரியாது. வாதி தாவா சொத்தை கிரயம் பெற்றபோது அளந்து பார்த்து வாங்கினாரா என்றால், தெரியாது. தாவா சொத்தில் கட்டியுள்ள கட்டிடத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தின் வாசல்படி எந்த பக்கம் உள்ளது என்றால், தெற்கு நோக்கியுள்ளது. தாவா சொத்தை நான் கடைசியாக நான் எப்போது பார்த்தேன் என்றால், அவ்வப்போது பார்ப்பேன், கடைசியாக 4 நாட்களுக்கு முன்பு

பார்த்தேன். தாவா சொத்து வாசல் கிழக்கு நோக்கியுள்ளதா என்றால், இல்லை. தாவா சொத்தை அளந்து பார்த்தபோது நான் நேரில் இருந்தேனா என்றால், இருந்தேன். வாதி கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தில் உள்ள கிரயப்பத்தின்படி உள்ள அளவுக்குளாகவே வீடு கட்டியுள்ளாரா அல்லது கூடுதலான அல்லது குறைவான அளவில் வீடு கட்டியுள்ளாரா என்றால், நீள, அகலம் எனக்கு சரியாக தெரியாது. தாவா சொத்தை கிரயம் பெற்ற பிறகு வாதி அவர் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டாரா என்றால், தெரியாது. வாதி வங்கியில் கடன் வாங்கியிருந்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆவணங்களை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. வாதி வீட்டிற்கு மேற்க்குபுறம் யார் வீடு உள்ளது என்றால், போலிஸ்காரர் வீடு உள்ளது, ஆனால் பெயர் தெரியவில்லை. அந்த போலிஸ்காரருக்கும் வாதிக்கும் இடையே இடம் சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவர் இவ்வழக்கில் தரப்பினராக இல்லை என்றால், சரிதான். வாதி தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பே 1973-ம் ஆண்டிலிருந்தே 1-ம் பிரதிவாதி பட்டுக்கண்ணுவுக்கு தாவா சொத்திற்கு கிழக்கே சொந்தமாக நிலம் இருந்தது என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது, ஆனால் வாதி கிரயம் பெற்ற பிறகுதான் அவ்வாறு 1-ம் பிரதிவாதிக்கு சொத்து இருந்த விவரம் தெரியும். வாதியின் கிரயப்பத்திரமே தவறானது என்றும் அதில் உள்ள நீள, அகலங்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, ஏற்கனவே இருந்த பத்திரத்தை பார்த்துதான் அளவுகள் எழுதப்பட்டுள்ளது. தவறான அளவுகளுடன் உள்ள கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் வாதி இவ்வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. தவறான அளவுகளுடன் இருந்த கிரயப்பத்திரத்தை பயன்படுத்தி, தனது செல்வாக்கின் மூலமாக வருவாய் துறையில் அனுமதி பெற்று வாதி கட்டிடம் கட்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. இன்றைய நாள் வரை தவறான அளவுகளுடன் எழுதப்பட்ட கிரயப்பத்திரத்தை மாற்றி எழுதிக்கொள்ள வாதி முயற்சி செய்யவில்லை என்றால், அதுபோல் தவறான அளவுகளுடன் கிரயப்பத்திரம் எழுதிக்கொள்ளவில்லை. உள்ளூரில் யாரும் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க முன்வராததால்

வாதியிடமிருந்து ஆதாயம் பெற்றுக்கொண்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறுவிசாரணையில்லை.

Ending Time: 12.34 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**